JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **222/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | சரவணன் | Village | கந்தாம்பாளையம் புதூர், பவானி ரோடு, பெருந்துறை |
| Father's Name | பொன்னுச்சாமி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 11.08.2026.**

**முதல் விசாரணை**

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பிஸினஸ் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 17.03.2018 ம் தேதி மதியம் சுமார் 12.00 – 12.30 மணி இருக்கும் வெங்கமேட்டில் உள்ள இந்தியன் பெட்ரோல் பங்கிற்கு எதிர்ப்புறம் விபத்து நடந்தது சம்பந்தமாக பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக லோகநாதனும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.08.11 16:10:36 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்தில் இறந்து போன காசியண்ண கவுண்டர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். விபத்து நடந்த விபரம் எனக்கு எத்தனை மணிக்கு தெரியும் என்றால் 11:45 மணிக்கு தெரியும். போலீசார் விபத்தில் இறந்து போனதை சொல்லி பார்வை மகஜரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.2 ல் என்னென்ன வாசகங்கள் எழுதினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை. அ.சா.ஆ.2 ல் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய் காட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன நபர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.08.11 16:10:41 +0530

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை